அடையாளம்
கொள்கை ஆய்வுக்கான நிலையம்

**அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்**

**விடய அறிக்கை—01 09 டிசம்பர் 2016**

# "மத்திய அரசாங்கம் - மாகாண சபைகளுக்கிடையிலான தொடர்பு" உபகுழுவும் ஒற்றையாட்சி முறையும்

இலங்கை அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழுவின் ஆறு உப குழுக்களின் அறிக்கைகளையும் இலங்கை பிரதமரும், அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழுவின் தலைவருமான திரு ரணில் விக்ரமசிங்க அவர்கள் நவம்பர் 19 ஆம் திகதி அரசியலமைப்புச் சபையில் சமர்ப்பித்தார்.

உத்தியோகபூர்வமாக, வழிப்படுத்தும் குழுவின் முதல் இடைக்கால அறிக்கையாகவே இந்த ஆறு அறிக்கைகளும் கூட்டாக கருத்தப்பட்டு முன்வைக்கப்பட்டன. எனினும், வழிப்படுத்தும் குழு உப குழுக்களின் அறிக்கைகளை அப்படியே அரசியலமைப்புச் சபையில் முன்வைத்ததேயன்றி, அவ்வறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னரே வழிப்படுத்தும் குழு அவற்றை விவரமாக பரிசீலிக்கும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டது[1]. வழிப்படுத்தும் குழுவின் சொந்த இடைக்கால அறிக்கையானது (அதாவது உத்தியோகபூர்வமாக வழிப்படுத்தும் குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை) 2016 டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. வழிப்படுத்தும் குழு தனக்காக ஒதுக்கிய 40 சுற்றுக்களுக்கும் அதிகமான கூட்டத் தொடர்களை அடிப்படையாகக் கொண்டே இந்த இரண்டாவது இடைக்கால அறிக்கை அமைந்திருக்கும். அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழு நேரடியாக கவனம் செலுத்தும் விடயங்கள் பின்வருமாறு: நிகழ்கால அரசியலமைப்பின் அத்தியாயம் 1 மற்றும் 2 உள்ளடக்கிய விடயங்கள்[2]; அரசின் தன்மையும் இறையாண்மையும்[3]; மதம்; அரசாங்கத்தின் வடிவம்; தேர்தல் முறை மறுசீரமைப்பு; அதிகாரப் பகிர்வு தொடர்பான கோட்பாடுகள்; மற்றும் நிலம்[4].

---

[1] அரசியலமைப்புச் சபை. 'அரசியலமைப்புச் சபையின் மூன்றாவது அமர்வு'. http://tamil.constitutionalassembly.lk/gallery/press-releases/131-2016-11-19-05-13-25

[2] 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் குடியரசு யாப்பின் **1வது அத்தியாயமானது** இறையாண்மையையும் (3ஆம் 4ஆம் சரத்துக்கள்), அரசின் தன்மை என்ற கேள்வியையும் (2ஆம் சரத்து அதனை ஒற்றையாட்சி முறை என வரவிலக்கணப்படுத்துகின்றது) அணுகுகின்றன. **2வது அத்தியாயத்தின்** ஒரேயொரு சரத்தான 9வது சரத்து அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் சரத்தாகும்.

[3] இவ்விடத்தில் வழிப்படுத்தும் குழு "அத்தியாயம் 1" இற்கான விடயங்கள் என்று அடையாளம் கண்ட விடயங்களுக்கும் "அரசின் தன்மை, இறையாண்மை" ஆகிய விடயங்களுக்கும் இடையே மேற்பொருந்துகை காணப்படுகின்றது.

[4] அரசியலமைப்புச் சபை. 'வழிப்படுத்தும் குழு'. http://tamil.constitutionalassembly.lk/steering-committee

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மிகவும் முக்கியமானவையும், சர்ச்சைக்குரியவையுமான விடயங்களை வழிப்படுத்தும் குழு தனக்காக ஒதுக்கிக் கொண்டுள்ளது. எனினும் மேலோட்டமாக பார்த்தால் கூட வழிப்படுத்தும் குழு தனக்காக ஒதுக்கிக் கொண்ட பல விடயங்கள், குறிப்பாக ''அதிகாரப் பகிர்வு தொடர்பான கோட்பாடுகள்'' மற்றும் ''நிலம்'' ஆகியன ''மத்திய அரசாங்கம் -- மாகாண சபைகளுக்கிடையிலான தொடர்பு'' உப குழுவின் மேற்பார்வைக்குள்ளும் அடங்கக் கூடியவையே. ''மத்திய அரசாங்கம் -- மாகாண சபைகளுக்கிடையான தொடர்பு'' உபகுழு இந்த மேற்பொருந்துதலைப் பற்றி அறிந்திருந்தாலும் தனக்கு கிடைத்த ஆணையின் முழு வீச்சையும் வெளிப்படுத்தும் முகமாக தனது அறிக்கையின் பரிந்துரைகளில் மேற்கூறிய மேற்பொருந்தும் விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. இதனடிப்படையில் ''மத்திய அரசாங்கம் -- மாகாணங்களுக்கிடையிலான தொடர்பு'' உப குழுவின் பரிந்துரைகளில் காணி, காவல்துறை அதிகாரங்கள், அரசியலமைப்பு நீதிமன்றம் தொடர்பிலான விடயங்களும், அனுபந்தமாக/பிற்சேர்க்கையாக ஒருங்கிய/பொது அதிகார நிரல் மற்றும் மாகாணங்களுக்கு ஒதுக்கிய அதிகார நிரல் தொடர்பிலான விடயங்களும் உள்ளடங்கியுள்ளன[5]. இந்த உபகுழுவின் பொது எதிர்க்கட்சி உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) உறுப்பினர்களும் இறுதி அறிக்கையில் கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உப குழு அறிக்கையை அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் முன்னெச்சரிக்கையுடனேயே வரவேற்கிறது. இவ்வுப குழு அறிக்கையின் பரிந்துரைகள்: 1. தற்போதைய மாகாண சபை முறைமையின் கீழ் எண்ணிக்கையில் சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகளுக்கும் கரிசனைகளுக்கும் அங்கீகரிக்கும் வகையில் அரசை மீள் கட்டுமானம் செய்ய சாத்தியமாக அமையக்கூடியவை எனவும், 2. ஐக்கிய இலங்கைக்குள் தமிழருக்கான உண்மையான சுய ஆட்சியினை உருவாக்குவதில் நேர்மறையாக பங்களிக்கக் கூடியவை எனவும் நாம் நம்புகின்றோம். ''மத்திய அரசாங்கம் --- மாகாணங்களுக்கிடையிலான தொடர்பு'' உபகுழுவின் பரிந்துரைகளில் சில:

- மாகாண ஆளுநரின் அலுவலகம் பெயரளவிலானதாக மாற்றப்பட்டு நிறைவேற்று அதிகாரம் அற்றதாக ஆக்கப்படல்.

[5] ''மத்திய அரசாங்கம் -- மாகாணங்களுக்கிடையிலான தொடர்பு'' அறிக்கைக்கு அதன் தவிசாளர் எழுதிய முன்னுரையை பார்க்க. பக்கம் 1-2. http://tamil.constitutionalassembly.lk/images/pdf/06-CenterPheripheryR-ste.pdf

- ஆளுநரின் நியமனம் சனாதிபதியினால் முதலமைச்சரின் உடன்பாட்டுடனேயே மேற்கொள்ளப்படல்.

- மாகாண சபையினால் இயற்றப்படும் சாதாரண சட்டங்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கும் அதிகாரமும், நிதிச்சட்டங்களை இயற்றும் அதிகாரங்களும் களையப்படல்.

- மாகாணத்தின் பொதுச் சேவைகள் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்டவரின் கீழ் செயற்படல்.

- ஒருங்கிய அதிகார நிரல் நீக்கப்படல்.

- ‘‘சகல விடயங்கள், பணிகள் ஆகியவற்றின் மீதான தேசிய கொள்கை’’ எனும் அத்தியாயத் தலைப்பு ஒதுக்கிய நிரலிலிருந்து நீக்கப்படல்.

- அரச காணிகள் மற்றும் சட்டம் & ஒழுங்கு ஆகிய விடயங்கள் தொடர்பாக மாகாணங்களுக்கே அதிகப்படியான அதிகாரங்கள் வழங்குதல்.

- மாகாணங்களுக்கு நிதி சுயாட்சி வழங்கும் விதத்தில் நியாயமான நிதி சீரமைப்பை மேற்கொள்ளல்.

அடையாளத்தின் இவ்வறிக்கை உபகுழுவின் ஒவ்வொரு பரிந்துரையையும் அலச முற்படாது, எனினும் முன்னர் குறிப்பிட்டது போல தற்போதைய அரசியலமைப்பின் கீழ் மாகாணங்கள் மீதான ஒற்றையாட்சியின் பிடியை தளர்த்த இப்பரிந்துரைகள் சாத்தியப்படக்கூடும் என நாம் கருதுகின்றோம். எனினும் இப்பரிந்துரைகளும் அவற்றுக்குண்டான கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களும் உள்வாங்கப்படப்போகும் ஒட்டுமொத்த அரசியல் கட்டமைப்பு எவ்வாறு அமைந்திருக்கும் என்று எது வித தகவலும் வெளிவராத நிலையில், இப்பரிந்துரைகளின் வீச்சு தொடர்பாக எதுவித கருத்தும் தற்போதைக்கு தெரிவிக்க முடியாது என்பதே திண்ணம். மேலும் புதிய அரசியலமைப்பின் ஒட்டுமொத்த கட்டமைப்பும் வரையறைகளும், ‘‘அரசின் தன்மை’’ என்ற விடயத்தின் கீழ், வழிப்படுத்தும் குழுவினால் கருதப்பட வேண்டிய விடயங்களாக அமைந்துள்ளன. இந்த உபகுழுவின் பரிந்துரைகள் புதிய அரசியலமைப்பில் இடம் பிடித்தாலும், ‘‘அரசின் தன்மை’’ என்ற கேள்விக்கு அவ்வரசியலமைப்பு எவ்வாறு தீர்வு காணும் என்பதைப் பொறுத்தே அப்பரிந்துரைகளின் வீச்சும், தாக்கமும் நிர்ணயிக்கப்படும். எனவே இது 1. புதிய அரசியலமைப்பின் முன்வரைபில் உபகுழுப் பரிந்துரைகள் எவ்வளவு தூரம்

உள்வாங்கப்படும் என்பதிலும் 2. வழிப்படுத்தும் குழு "அரசின் தன்மை" என்ற கேள்வியை எவ்வாறு அணுகும் என்பதிலுமே தங்கியுள்ளது.

''மத்திய அரசாங்கம் -- மாகாண சபைகளுக்கிடையிலான தொடர்பு'' உபகுழு அதிகார பகிர்வு தொடர்பில் எடுத்துக்கொண்ட அணுகுமுறையையும் அக்கறையையையும் ஏனைய உபகுழுக்கள், குறிப்பாக ''சட்டம் மற்றும் ஒழுங்கு'' உபகுழு, பகிரவில்லை என்பது இவ்விடத்தில் நாம் சுட்டிக்காட்ட வேண்டும். சட்டம் மற்றும் ஒழுங்குக்கான உபகுழுவின் பரிந்துரைகள் மாகாணங்களுக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பாக அதிகாரங்களை வழங்குவதில் மிகவும் அசமந்த போக்கையே காட்டியுள்ளன. அக்குழுவின் அறிக்கையின் பல சரத்துக்கள் வேண்டுமென்ற ஐயப்பாடுடையவையாக காணப்படுகின்றன. 13 ஆம் திருத்தத்தின் மூலம் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் ஐயப்பாடுடைய சரத்துக்கள் எப்பொழுதுமே மத்திய அரசுக்கே சாதகமாக அமைந்திருக்கும். உதாரணமாக இவ்வுபகுழுவானது தேசிய காவல்துறையின் செயற்பாடுகளில் ஒன்றென ''இலங்கையின் தேசிய பாதுகாப்பை பாதுகாத்தல்'' என்ற பரிந்துரையையம் ''இலங்கை குடிமக்களின் பாதுகாப்பை பாதுகாத்தல்'' எனும் பரிந்துரையையும் முன்வைத்துள்ளது[6]. இதே வேளை இக்குழுவின் பரிந்துரைப்படி மாகாணக் காவல் துறைக்கு ''மாகாணத்தின் பாதுகாப்பை பாதுகாத்தல்" என்ற ப ணி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது[7]. மேலும், மாகாண காவல்துறைக்கு ஒரு குறித்த விசாரணையை நிகழ்த்த நிபுணத்துவம் இல்லாதவிடத்து, அல்லது மாகாண காவல்துறை விசாரணையை பூர்த்தி செய்ய ஆர்வமற்றோ காணப்படுமிடத்து தேசிய காவல்துறை, மாகாண காவல்துறை ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்து குறித்த விசாரணையை தேசிய காவல்துறை தன்னகப்படுத்திக் கொள்ளலாம் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அமுல்படுத்தலின் அனுபவனத்திலிருந்து மத்தியிலுள்ள கட்டமைப்புக்கள் இவ்வாறாக மாகாணத்திடம் ''ஆலோசனை'' கோரும் அல்லது ''வேண்டுகோள்'' விடுக்கும் நிபந்தனைகள் வெறுமனே எழுத்தில் மாத்திரமே அமைந்திருப்பதுடன், மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கம் கையகப்படுத்துவதற்கு ஏதுவாகவே அமைந்திருக்கும். இந்த ''சட்டம் மற்றும் ஒழுங்கு'' உபகுழு அறிக்கை பரிந்துரைகளில் தேசிய காவல்துறை மற்றும் மாகாண காவல்துறை ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை உற்று நோக்கினால் மாகாண காவல்துறை வெறுமனே பெயரளவு கட்டமைப்பாகவே காணப்படுகின்றது.

---

[6] ''சட்டம் மற்றும் ஒழுங்கு'' உபகுழுவின் அறிக்கை. பக்கம் 26.
http://tamil.constitutionalassembly.lk/images/pdf/04-Law-and-Order-ste.pdf

[7] *Ibid.* பக்கம் 28

மேலும், பிரதமர் இந்த ஆறு உப குழு அறிக்கைகளையும் அரசியலமைப்புச் சபையில் சமர்ப்பிக்கும்போது தெரிவித்த கருத்துக்களையும் நாம் இவ்விடத்தில் கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது[8]. புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பகிர்வானது உயர் நீதிமன்ற நீதியரசர் சர்வானந்தாவின் 1987 ஆம் ஆண்டின் 13ஆம் திருத்தம் தொடர்பிலான பெரும்பான்மைத் தீர்ப்பில்[9] ஒற்றையாட்சி முறைமைக்குள் அதிகாரப்பகிர்வின் வரையறை என நீதியரசர் சர்வானந்தா அடையாளம் கண்ட வரையறையினைத் தாண்டிச் செல்லாது என்று பிரதமர் குறிப்பிட்டிருந்தார். நீதியரசர் சர்வானந்தாவின் இந்தத் தீர்ப்பு அதே வழக்கின் தீர்ப்பில் கருத்து தெரிவித்த நீதிபதி ரணசிங்கவின் கருத்துக்களுடன் சேர்ந்தே வாசிக்கப்பட வேண்டியது. 13 ஆம் சட்டத்திருத்தத்தை 1978 அரசியலமைப்பின் ஒற்றையாட்சி முறைமைக்குள் பொருத்துவதற்காகவும், 13 ஆம் சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் சர்ஜன வாக்கெடுப்பு நடைபெறாமல் தடுப்பதற்காகவும் நீதியரசர் சர்வானந்தா ஒற்றையாட்சி முறைமைக்கு மிகவும் குறுகிய வரைவிலக்கணமொன்றை வழங்கியிருந்தார்.

தனது தீர்ப்பில் நீதியரசர் சர்வானந்தா கலாநிதி K. C. வியர் அவர்களின் ஒற்றையாட்சி முறைமைக்கும் சமஸ்டி முறைமைக்கும் இடையிலான வித்தியாசங்களை மேற்கோள் காட்டியிருந்தார்:

> "சமஸ்டி அரசியலமைப்பொன்றின் கீழ் அரசின் அதிகாரங்கள் முழு மத்திய அரசாங்கத்திற்கும், பகுதிகளுக்கான (மாநில அல்லது மாகாண) அரசாங்கங்களிற்கிடையேயும் பகிரப்படும். இவ்விரு வகை அரசாங்கங்களும் தத்தமது செயல் எல்லைகளுக்குள் சட்ட ரீதியாக சுயாதீனமானவையாக காணப்படும். மத்திய அரசாங்கமானது தனக்கே உரிய அதிகாரங்களை கொண்டிருப்பதுடன் இவ்வதிகாரங்களை மாகாண அரசாங்கங்களின் ஆதிக்கம் இன்றி செயற்படுத்தும் அதே வேளை, மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டினுள் வராது தனது அதிகாரங்களை செயற்படுத்தும். குறிப்பாக முழு மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறித்தவொரு வரையறையினுள்ளும், மாகாண அரசாங்கங்களின் அதிகாரங்கள் தனியாக வரையறுக்கப்பட்டும் காணப்படும். இந்த இரண்டு அரசாங்கங்களினதும் அதிகாரங்கள் மற்றையதற்கு இரண்டாம் பட்சமாக அமையாது. இவை ஒன்றுக்கொன்று ஒருங்கிணைந்தவையாகவே காணப்படும். இதற்கு மாறாக ஒற்றையாட்சி முறைமையொன்றின் கீழ் மத்திய பாராளுமன்றமே முழு நாட்டிற்குமான சட்டதிட்டங்களை இயற்றும் உச்சப் பட்ச கட்டமைப்பாக அமையும். ஏனைய சட்டம் இயற்றும் கட்டமைப்புக்களை சட்டங்களை இயற்றவும் அவற்றை அமுல்படுத்தவும் இவ்வுச்ச கட்டமைப்பு அனுமத்தித்தாலும், சட்டப்படி, அந்த கட்டமைப்புக்கள் இவ்வுச்ச

---

[8] பிரதமரின் இவ்வுரையின் உத்தியோகபூர்வ வடிவம் அரசியலமைப்புச் சபை இணையத்தளத்திலோ, பாராளுமன்ற இணையத்தளத்திலோ இவ்வறிக்கை பிரசுரிக்கும் வரை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

[9] 1987 (2) SLR 312

> கட்டமைப்பிற்கு இரண்டாம் பட்சமாக காணப்படுவதுடன், எந்நேரத்திலும் அவ்வுச்ச கட்டமைப்பினால் இவற்றின் அதிகார அமுலாக்கல் நிராகரிக்கப்படலாம்.''[10]

இவ்வாறு விளங்கிக்கொள்ளப்பட்ட ஒற்றையாட்சி முறைமையின் வரையறைகளை 13 ஆம் திருத்தச்சட்டத்தினால் உருவாக்கப்படும் அதிகாரக் கட்டமைப்புக்கள் மீறப்போவதில்லை என நீதியரசர் சர்வானந்தா தனது தீர்ப்பில் விளக்க முற்படுகின்றார். அதாவது 13 ஆம் திருத்தத்தினூடு உருவாக்கப்படும் அதிகார கட்டமைப்புக்களினால் சுயாதீனமான தனித்தனி செயல் எல்லைகளை கொண்ட அரசாங்கங்கள் உருவாக்கப்படப் போவதில்லை என்றும், மேலும் இத்திருத்தச் சட்டம் மத்திய அரசின் விருப்புக்கமைய செயற்படும் இரண்டாம் பட்ச கட்டமைப்பையே உருவாக்கும் என மேலும் நீதியரசர் சர்வானந்தா கருத்தை முன்வைக்கிறார்:

> "எங்கள் பார்வையில் 13 ஆம் திருத்தச் சட்டம் மூலமாகவோ, மாகாண சபைகள் சட்டம் மூலமாகவோ இறைமையின் பகிர்வோ, சட்டம் இயற்றலின் பகிர்வோ, நிறைவேற்று அதிகாரத்தின் பகிர்வோ, நீதித்துறையின் பகிர்வோ இடம்பெறவில்லை. நாட்டின் தேசிய அரசாங்கமானது ஏனைய அனைத்து அதிகார கட்டமைப்புக்களை அதிகார படிநிலைகளை விடவும் உச்சமானது. மாகாண சபைகள் வெறும் இரண்டாம் பட்ச கட்டமைப்புக்களே. தேசிய பாராளுமன்றமானது தனது மேலாதிக்கத்தையோ, அதிகாரங்களையோ மாகாண சபைகளுக்கு விட்டுக் கொடுக்கவில்லை. எனவே எமது நோக்குநிலையில், இலங்கை குடியரசானது தொடர்ந்தும் ஒற்றையாட்சி முறைமையை கொண்டிருப்பதோடு இந்த திருத்தச் சட்டங்களை எவ்விதத்திலும் ஒற்றையாட்சி முறைமையை பாதிக்கவில்லை.''[11]

பிரதமர் ரணில் விக்ரமசிங்க நீதியரசர் சர்வானந்தாவின் தீர்ப்பை இவ்விடத்தில் மேற்கோள் காட்டியது பிரச்சினைக்குரியது. பிரதமரின் இக்கருத்து, தற்போதைய அரசியலமைப்பு மற்றும் அது தொடர்பிலான தீர்ப்புகள் ஆகியவற்றில் வெளிப்படும் ஒற்றையாட்சி முறைமையின் புரிதலின் அடிப்படையிலேயே, உருவாகப்போகும் புதிய அரசியலமைப்பிலும் ''அதிகாரம்''/ ''அதிகாரப் பகிர்வு'' ஆகிய கோட்பாடுகள் கையாளப்படப் போகின்றன் என்ற அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றன. மேலும், புதிய அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வு 13 ஆம் திருத்தச் சட்டத்தின் வரையறைகளை தாண்டிச் செல்லாது என்று பிரதமர் தொடர்ந்து கூறிவரும்

---

[10] *Ibid.* தீர்ப்பின் 319வது பக்கத்தில் K. C வியரின் "Modern Constitutions" நூலின் 19வது பக்கத்தை மேற்கோள் காட்டுகையில்.
[11] *Ibid.* பக்கம் 323

கருத்துக்களுக்கு அவரின் அண்மைய இந்த கூற்றுக்கள் வலுச் சேர்க்கின்றன[12]. மேலும், புதிய அரசியலமைப்பை வரையும்போது வலுவிழக்கச் செய்யப்பட்ட ஒற்றையாட்சி முறைக்கான அணுகுமுறை ஒன்றை கையாண்டு, உண்மையான அதிகாரப்பகிர்வு திட்டமொன்றை வரையும் அதே வேளை, சிங்கள- பௌத்த வாக்கு வங்கிக்கு முக்கியமானதாகவிருக்கும் ''ஒற்றையாட்சி முறைமை'' என்ற முத்திரையை தக்கவைத்துக் கொண்டே இதைச் செய்யலாம் என்று அரசியலமைப்பு அறிஞர்களும், செயற்பாட்டாளர்களும், லால் விஜேநாயக தலைமை தாங்கிய ''அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொது மக்கள் யோசனைக்கு குழு'' வைச் சேர்ந்த அங்கத்தவர்களும் தெரிவித்த கருத்தை[13] பிரதமரின் இக்கருத்துக்கள் மறுதலித்தே அமைகின்றன.

மாகாண சபைகள் தமது செயல் எல்லைகளுக்குள் சுயாதீனமானவை எனவும் அச்செயல் எல்லைகளுக்குள் அந்தந்த சபைகளே உச்சமானவை எனவும் தெளிவாக தெரிவிக்கப்படாதவிடத்து ''ஒற்றையாட்சி'' என்ற பதத்தின் பிரயோகம் மாகாண சபைகளை இரண்டாம் பட்சமாக்கும் படி நிலையொன்றை உருவாக்கும என்பதே எமது நிலைப்பாடு. இது இவ்வாறிருக்க பிரதமரின் இக்கருத்துக்கள் குறைந்த பட்ச ஒற்றையாட்சி அணுகுமுறை ஒன்றை கூட எடுக்க விருப்பமின்மையை காட்டி நிற்பதோடு, ஒருமுகப்படுத்திய ஒற்றையாட்சியின் புரிதலையே காட்டுகின்றது. பிரதமரின் இந்த நிலைப்பாடும் அணுகுமுறையும் தான் வழிப்படுத்தும் குழுவின் அணுகுமுறையாக இருக்குமெனில் ''மத்திய அரசாங்கம்--- மாகாணங்களுக்கிடையிலான தொடர்பு'' உப குழு அறிக்கையின் பரிந்துரைகள் வலுவிழக்கச் செய்யப்படும் அபாயம் இருப்பதாக நாம் கருதுகிறோம்.

எனவே அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்:

- ''மத்திய அரசாங்கம்--- மாகாணங்களுக்கிடையிலான தொடர்பு'' உப குழு அறிக்கையை முன்னெச்சரிக்கையுடன் அவதானித்துள்ளது.

---

[12] இது தொடர்பில் அண்மையில் யாழில் பிரதமரின் கருத்துக்கள். http://www.bbc.com/tamil/sri-lanka-37398549 (பிபிசி. செப்டம்பர் 17, 2016).

[13] ''அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொது மக்கள் யோசனைக்கு குழு அறிக்கை''. வலுவிழக்கச் செய்யப்படும் ஒற்றையாட்சி முறைமைக்குரிய இக்குழுவின் ஒரு சாராரின் பரிந்துரை (பக்கம் 28): ''இலங்கை குடியரசானது, அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தின் கருவிகளைக் கொண்ட ஒரு சுதந்திரமான, சுயாதீனமான, இறைமையுள்ள ஒற்றையாட்சி நாடாகவிருப்பதோடு, இலங்கையர் என்ற அடையாளத்தை முன்னேற்றும் அதே வேளை, நாட்டின் பல்வேறு மக்கள் கூட்டங்களுக்கிடையேயான சமாதானத்தையும் சௌஜன்யத்தையும் பாதுகாத்து மற்றும் முன்னேற்ற வேண்டும். இவ்வுறுப்புரையின் நோக்கத்திற்காக ஒற்றையாட்சி அரசு தேசம் என்பது, பல அடுக்குகளை கொண்ட ஆட்சி முறைமைகளுடன் கூடிய பிரிக்கப்படாத தேசம் என பொருள்படும்.''

- இவ் உபகுழுவின் அரசியல் பார்வையில் வழிப்படுத்தும் குழுவும் 'அரசின் தன்மை' என்ற கேள்வியை அணுகுதல் வேண்டும் என கேட்டுக் கொள்கின்றது.

- ஆழ வேரூன்றிய ஒற்றையாட்சி தத்துவத்தை புதிய அரசியலமைப்பில் தொடர்வது பற்றி பிரதமர் தொடர்ந்து கூறி வரும் கருத்துக்களை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றது.